10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

எதிரொலி

Eth

குரல் 01 அதிர்வு 329 புதன்கிழமை 18 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 3818

# எனக்கெதிராக பிரேரணையா?

## வெட்கக்கேடான செயல்

திருகோணமலை, ஏப். 18

ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர நினைப்பது அநாகரிகமான செயலென எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், அதனை எதிர்கொள்ள தயாராகவே இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற

06▶



# இலங்கைக்கு கிடுக்கிப்பிடி

## போடுகிறது அமெரிக்கா



வோஷிங்டன், ஏப்ரல் 18

நீதிப் பொறிமுறையை உருவாக்குதல், காணாமல் போனோர் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், வடக்கு – கிழக்கில் படைகளைக் குறைத்தல், பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட இலங்கைப் படையினருக்கு தண்டனை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களை நிறைவேற்றினாலேயே 2018 நிதி ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் இலங்கைக்கு

06▶

# சிதறுகிறது சு.க.

கொழும்பு,ஏப்.18

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

06▶

# விரிவுரைகள் திங்களன்று

யாழ்ப்பாணம், ஏப். 18

கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய, தொழிநுட்பபீட கற்றல் நடவடிக்கைகள் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

06▶



# கடமையை பொறுப்பேற்றார் கூரே

யாழ்ப்பாணம், ஏப். 18

வட்க்கு மாகாண ஆளுநராக மீளவும் நியமிக்கப்பட்டுள்ள றெஜினோல்ட் கூரே நேற்றையதினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மாகாணங்களுக்கான ஆளுநர் மாற்றத்தின்

06▶

# கனடாவில் தொடர்கிறது ஈழத்தமிழர் படுகொலை

ஸ்காபுரோ, ஏப். 18

கனடாவில் தொடர் கொலையாளியான ப்ரூஸ் மெக்ஆர்தரினால் கொலை செய்யப்பட்ட மற்றுமொரு ஈழத்தமிழர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.



கிருஷ்ணகுமார் கனகரட்ணம் (வயது 37) என்பவரே கொலை செய்யப்பட்டநிலையில் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உருக்குலைந்திருந்த அவரது சடலம், சர்வதேச முகவர்

06▶

# வவுனியா வடக்கில் கூட்டமைப்புக்கு அதிர்ஷ்டம்

## இரு சபைகளைக் கைப்பற்றியது

வவுனியா,ஏப்.18

திருவுளச்சீட்டின் மூலம் வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

இதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக போட்டியிட்டு தெரிவான க.தணிகாசலம் பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தவிசாளர் பதவிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சார்பில் தணிகாசலம், தமிழர்

06▶

# சுதாகரனை விடுவிக்க கல்விச்சமூகம் ஒன்றிணைவு

## 3 இலட்சம் கையொப்ப கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.18

தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனை விடுதலை செய்யக்கோரி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கொண்டு வந்த கையெழுத்துப் போராட்டத்தில் பெறப்பட்ட மூன்று லட்சம் கையெழுத்துக்கள் அடங்கிய மனு ஜனாதிபதியிடம் சேர்ப்பதற்காக வடக்கு மாகாண பதில் முதலமைச்சரும், மாகாண கல்வி அமைச்சருமான கலாநிதி க.சர்வேஸ்வரனிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

06▶

# ஒரேநாளில் ஒருகோடி



யாழ்ப்பாணம், ஏப். 18

வடமராட்சி கடற்பரப்பில் கரை வலை தொழில் செய்த மீனவர் ஒருவருக்கு் நேற்றைய தினம் 20 ஆயிரம் கிலோவுக்கும் அதிமான மீன்கள் வலையில் சிக்கிக் கொண்டன. அவற்றின் சந்தைப் பெறுமதி ஒரு கோடிக்கு மேல் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடற்பரப்பில் கரைவலை தொழில் செய்யும் மீனவருக்கே இவ்வாறு மீன்கள் அகப்பட்டன.

06▶

# மகிந்தவுடன் இணைவதை மக்கள் மன்னிக்கார்

## கூட்டமைப்புக்கு செல்வம் புத்திமதி

வவுனியா,ஏப்.18

பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்படுவதை மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில்

06▶



# மயிலிட்டி விடுவிப்பு பெரு வெற்றி

## சுமந்திரன் பெருமிதம்

மயிலிட்டி,ஏப்.18

மயிலிட்டி துறைமுகம் மற்றும் மயிலிட்டி பிரதேசம் ஒரு போதும் விடுவிக்கப்படமாட்டாது என அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தும், தற்போது, மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டது மிகப்பெரிய

06▶



## ஜனாதிபதி நாடு திரும்பியதும்

# பழைய கூட்டுக்கு புதிய உடன்படிக்கை

கொழும்பு,ஏப்.18

கூட்டு அரசாங்கம் தொடர்பான புதிய உடன்பாடு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியவுடன், செய்து கொள்ளப்படும் என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க.வுக்கும்- சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலேயே

06▶

# பகையையும் எதிரிகளையும் தேர்தல் உருவாக்கக் கூடாது



வாழைச்சேனை, ஏப்.18

தேர்தல் நிரந்தரமாகப் பகையை உருவாக்குவதாகவோ, எதிரிகளை உருவாக்குவதாகவோ அமைந்து விடக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை கிண்ணையடி மில்லர் விளையாட்டுக் கழகத்தின் சித்திரைப்புத்தாண்டு விளையாட்டு விழா, கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"தேர்தலை மறந்து அடுத்த கட்டமாக வட்டாரத்தின் அபிவிருத்திக்காக ஒன்றுபட்டு இயங்க வேண்டும். வாகரைப் பிரதேச சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு உதவி செய்தமைக்காக வாகரைப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் படகு மற்றும் வலைகளை எரித்து பழிவாங்கிய செயற்பாடு இடம்பெற்றுள்ளது. இந்தச் செயற்பாட்டை போட்டி போட்டு தோற்றவர்கள் செய்ததாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

அடாவடித்தனம், அட்டகாசம், அராஜகம் என்பன கடந்த கால ஆட்சியில் அரங்கேற்றப்பட்டன. அதன் பிறகு இவ்வாறு அட்டகாசம் இல்லாமல் இருந்தாலும், தற்போது பழைய பாணியில் மீண்டும் அராஜகச் செயல்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. தோல்வி ஏற்படும்போது அதனை தாங்கிக்கொள்ளும் பக்குவம் இருக்கவேண்டும், வெற்றி பெற்றால் பட்டாசு கொழுத்துவதோ அல்லது தோல்வி ஏற்பட்டால் வெற்றி பெற்றவர்களின் உடைமைகளை நாசம் செய்வதோ கூடாத காரியமாகும். தோல்வி ஏற்பட்டால் மற்றவர்களுக்கு பங்கம் விளைவிக்கும் விதத்தில் செயற்பட்டால், அவர்கள் நிரந்தரமாக மக்கள் மத்தியில் நிலைக்க மாட்டார்கள்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## காத்தான்குடிப் பகுதியில் போதைப் பாவனை அதிகரிப்பு



மட்டக்களப்பு, ஏப்.18

மட்டக்களப்பு - காத்தான்குடிப் பகுதியில் போதைப் பொருள் பாவனையாளர்கள் அதிகரித்துள்ளனர் எனக் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தெரிவித்துள்ளார்.

தேசிய போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"கேரளக் கஞ்சா, ரமடோன், காசிவ், போன்ற பல போதைப் பொருட்கள் பாவனையில் உள்ளன. மது பாவனையை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனைய போதை வஸ்துகள் இல்லை எனக் கூறிவிட முடியாது. இது தொடர்பில் சமூகத்தில் வாழ்கின்ற அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும். போதைப் பாவனைக்கு அடிமையானோர்களை மீட்டெடுப்பதற்காக காத்தான்குடியில் ஒரு நிலையம் உள்ளது. அங்கு செல்வதன் மூலம் போதையில் இருந்து விடுபட்டு புதிய மனிதர்களாக வாழமுடியும். போதைப் பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப் பட வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஏப்.18


மட்டக்களப்பில் காணாமல் போன குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, இருதயபுரம் மேற்குப் பகுதியைச் சேர்ந்த, தங்கவேல் ஜெயராஜ் (வயது- 49) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபரைக் கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து காணவில்லை என அவரது மனைவி மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதை அடுத்து, இவர் தேடப்பட்டு வந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

# பொகவந்தலாவைக்கு பிரதமர் விஜயம்



பொகவந்தலாவ, ஏப்.18

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொகவந்தலாவ டின்சின் பகுதிக்கு நேற்று விஜயம் செய்துள்ளார்.

பொகவந்தலாவ டின்சின் தோட்டத்தில் "குழிப்பந்தாட்டம்" கோல்ப் மைதானம் ஒன்றையும், உல்லாச விடுதிகளையும் அமைப்பதற்கான இடங்களைப் பார்வையிடவே பிரதமர் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. பியதாஸ, ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் பிரதி தலைவர் ஏ.எம்.பாமிஸ் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது ஹட்டனுக்கு சென்ற பிரதமர், நுவரெலியா மாவட்டத்தில் சில பகுதிகளை வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விரும்பதக்க பிரதேசங்களாக மாற்றியமைக்கப் போவதாக தெரிவித்திருந்தார். இதற்கமையவே பொகவந்தலாவ பிரதேசத்தை உல்லாசப் பயணிகள் விரும்பதக்க பிரதேசமாக மாற்றியமைக்கும் நடவடிக்கை பிரதமரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

## நீரில் மூழ்கி 93 பேர் உயிரிழப்பு



கொழும்பு, ஏப்.18


இந்த வருடத்தின் முதல் 60 நாட்களில் 93 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 728 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இதில் 150 பேர் பெண்கள் ஆவர்.

இந்த 728 பேரில் 100 பேர் 19 வயதுக்குக் குறைந்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த 2016 ஆம் ஆண்டு 877 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இதில் 177 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# பெற்றோல் விலை அதிகரிக்குமாம்



கொழும்பு, ஏப்.18

பெற்றோல் விலையை அதிகரிப்பது சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட விலைச் சூத்திரத்தை, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்க உள்ளதாக நிதியமைச்சு கூறியுள்ளது.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் பெற்றோல் விலையை அதிகரித்த பின்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குகிறது எனத் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்த விலை அதிகரிப்புக்குப் பின்னர் கனிய வள அபிவிருத்தி அமைச்சு, நாளொன்றுக்கு மேலதிகமாக 38 மில்லியன் ரூபா நட்டம் அடைகிறது என அந்த அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோல் விலையும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று நிதியமைச்சுக்கு கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது.

"இது சம்பந்தமாக விலைச் சூத்திரம் ஒன்றை வகுப்பதற்கு நிதியமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. அதன்படி அந்த விலைச் சூத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கினால், உலக சந்தையில் எரிபொருள் விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுக்கு அமைவாக இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாட்டிலும் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படும். அதன்படி எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் எரிபொருள் விலை அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக நிதியமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## அங்கத்தவர்களுக்கு புதிய இலக்கம்

கொழும்பு, ஏப்.18

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யும் ஊழியர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை, உறுப்பினரின் இலக்கமாகப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புதிய உறுப்பினர் இலக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என்று தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.விமலவீர தெரிவித்துள்ளார்.

இதற்காகத் தொழிலாளர் மற்றும் தொழில் வழங்குநர்களின் விபரங்கள் அடங்கிய விபரங்களுடன் திணைக்களத்தின் கணினியில் தரவுகளை புதுப்பிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பல நிறுவனங்களில் பணிபுரிந்துள்ள ஊழியர்களுக்குப் பல இலக்கங்கள் காணப்படுகின்றன. நிதியத்தின் பயன்களை பெற்றுக் கொள்ளும் போது இது சிக்கலாக அமைகின்றது. இந்த நெருக்கடியை தீர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர் இலக்கமாக அவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ஆ)

எதிரொலி Ethiroli
புதன். 18 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

## வெற்றிக்கு அவர்களே காரணம்

மயிலிட்டி உட்பட வலி.வடக்கின் 683 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டமை தமக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று கூட்டமைப்பின் பேச்சாளரும், எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார். அவர் கூறியதில் பெருமளவு உண்மை இருக்கவே செய்கின்றது. வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த பகுதிகளை விடுவிக்கக் கோரி, நீண்டகாலமாக மக்கள் நடத்தி வந்த போராட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பும் பெரியளவில் இருந்தது. அத்தோடு உயர் பாதுகாப்பு வலயமென்ற போர்வையில் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் நிலங்களை விடுவிக்கக் கோரி கூட்டமைப்பே நீதிமன்றில் வழக்குப் போட்டது. கூட்டமைப்பின் தொடர்ச்சியான அரசியல் அழுத்தங்களும், நீதிமன்ற வழக்குமே இவ்வாறு விடுவிக்கவே முடியாது என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்ட மயிலிட்டி உள்ளிட்ட பகுதிகள் விடுவிக்கப்படக் காரணமாயிற்று.

ஆனால், அண்மைக்காலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தடம்மாறிய பயணத்தால் மக்களுக்கு கூட்டமைப்பின் அரசியல் உழைப்புத் தெரியவில்லை. வலி.வடக்கை விடுவித்ததில் தன்னுடைய பங்களிப்பும் இருப்பதாக ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தாவும் சொல்லியே வருகின்றார். ஆனால் அவர் அமைச்சராக இருந்த காலத்தில், அதுவும் மகிந்தவின் செல்லப்பிள்ளையாக டக்ளஸ் இருந்தபோது கூட, உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் தொடர்பில் அவரால் எந்தவொரு ஆணியும் பிடுங்க முடிந்திருக்கவில்லை. அத்தோடு காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், பொது அமைப்புகளும் ஒழுங்கு செய்த அகிம்சை ரீதியான போராட்டங்களை மழுங்கடிக்கும் முயற்சிகளில் ஈ.பி.டி.பி பகிரங்கமாகவே ஈடுபட்டிருந்தது. போராட்டத்தை ஒழுங்குபடுத்துபவர்களுக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் அல்லது அவர்களின் வீடுகளுக்கு கழிவு ஒயில் வீசுதல், போராட்டத்துக்கு மக்கள் செல்லும் பஸ்களுக்கு கல் வீசித் தாக்குதல், போராட்டம் நடைபெறும் இடங்களுக்குச் சென்று மிரட்டுதல் போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளிலும் இதே ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினர்களே ஈடுபட்டிருந்தனர். அத்துடன் வலி. வடக்கு விடுவிக்கப்பட முடியாதமைக்கு அரசுக்குச் சாதகமாக வக்காலத்து வாங்கும் வேலையையும் ஈ.பி.டி.பி திறம்படச் செய்திருந்தது. எனவே வலி. வடக்கு விடுவிப்பில் ஒரு துரும்பளவு பங்களிப்புக் கூட ஈ.பி.டி.பிக்கு இல்லை என்பதே வெளிப்படை. ஆயினும் காணி விடுவிப்பால் கூட்டமைப்புக்கு கிடைக்கவுள்ள நல்ல பெயரில் தாமும் குளிர்காய ஈ.பி.டி.பி நினைக்கிறது.

ஆனாலும் வலி.வடக்கு மக்களுக்கு எது உண்மை என்பது தெரியும். இந்தக் காணி விடுவிப்புக்கான போராட்டங்களில் தமிழர்களின் அரசியல் பலமாக கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கடுமையாக உழைத்திருந்தன. ஆயினும் இந்த விவகாரத்தில் தனியே அரசுக்கெதிரான மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைத்ததோடு மாத்திரம் நின்றுவிடாமல், நீதிமன்ற வழக்கு மூலம் அரசுக்கு சட்ட ரீதியாகவும், சர்வதேசப் பிரமுகர்களுக்கு வலி.வடக்கு விடுவிப்பு பற்றி தொடர்ச்சியாக எடுத்துரைத்ததன் மூலம் அரசியல் ரீதியாகவும் கூட்டமைப்பு இந்த விடயத்தில் பிரதான பங்கு வகித்தது. எனவே இந்தக் காணி விடுவிப்பின் வெற்றியில் கூட்டமைப்பே உரிமை கோரமுடியும். அது எந்தச் சந்தேகமும் இல்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# ஈழத் தமிழர் உரிமையை மீட்க இந்தியா உதவ வேண்டும்

நெல்லை, ஏப். 18

இலங்கைத்தமிழர்கள்தமது உரிமையை மீட்க இந்தியா உதவவேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரன் நேற்று காலை நெல்லைக்குச் சென்றார்.

அங்கு வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த முதலமைச்சர், "இலங்கை தமிழர்கள் உரிமையை மீட்டெடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவில் இலங்கை தமிழர்களை வைத்து அரசியல் செய்வது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல.

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளின் தற்போதைய நிலை குறித்து இந்திய அரசு ஆய்வு செய்ய வேண்டும். அவர்கள் வாழ்வு மேம்பட இன்னும் அதிகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசு பல நன்மைகள் செய்தாலும் இன்னும் கூடுதல் உதவிகள் செய்யக் கூடிய வாய்ப்பு அரசுக்கு இருக்கிறது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரதி சபாநாயகர் பதவியும் ஐ.தே.க. வசமாகும்?

கொழும்பு, ஏப். 18

வெற்றிடமாகியுள்ள பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரொருவர் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரும் குறித்த பதவிக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த நாடாளுமன்றக் குழுக் கலந்துரையாடலின் போது, இதுதொடர்பில் கலந்துரையாட பின்வரிசை உறுப்பினர்கள் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளமையால் ஏற்பட்ட வெற்றிடமானது நாடாளுமன்றத்தின் இரண்டாம் அமர்வுகளின் போது, நிரப்பப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மக்களின் வழிகாட்டலில் முன்னோக்கி நகரும் அரசு



கொழும்பு,ஏப்.18

சமீபத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் வழங்கியவழிகாட்டுதலுடன்அரசாங்கம் முன்னோக்கி நகர்வதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக வாக்களித்தமையால் அரசாங்கத்தில் இருந்து தற்போது அமைச்சர்கள் குழு ஒன்று இராஜினாமா செய்தது. இது அரசாங்கத்துக்கு மிகவும் இக்கட்டான சூழ்நிலையினை உருவாக்கியுள்ளது.

இருப்பினும் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு எமது அரசாங்கம் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய ஒரு வலுவான பயணத்தை ஆரம்பித்துள்ளது.

அவ்வாறே, ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக அரசாங்கத்தால் மேற்கொண்ட அனைத்து விடயங்களும் வெற்றியளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# சம்பந்தனுக்கு எதிரான பிரேரணை அறியவில்லையாம் மகிந்த



கொழும்பு, ஏப். 18

எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது குறித்து தான் அறிந்திருக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்கள் மூலமே அறிந்துகொண்டதாக குறிப்பிட்டுள்ள அவர், இந்த விடயம் தொடர்பில் இதுவரையிலும் கலந்துரையாடவில்லை எனவும் கூறியுள்ளார்.

"தற்போது எதிர்க்கட்சி தலைவர் ஒருவர் இல்லையல்லவா? இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து ஏற்படுத்தியுள்ள அரசாங்கத்தின் மூலம் எதிர்க்கட்சி தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அரசாங்கத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர். அவர்கள் அரசாங்கத்தின் பங்காளிகள். இரா. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது குறித்து நான் அறிந்திருக்கவில்லை.

இது குறித்து ஊடகங்கள் மூலமே அறிந்துகொண்டேன். இந்த விடயம் தொடர்பில் இதுவரையிலும் கலந்துரையாடவில்லை.

எவ்வாறாயினும், நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுமா என்பது குறித்து தனக்கு தெரியாது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்று நாளும் கோளும்

18.04.2018 புதன்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 05 ஆம் நாள்

திரிதியை மு.ப. 03.30 வரை — கார்த்திகை மு.ப. 02.21 வரை — குளிகை மு.ப. 10.30-12.00
இராகுகாலம் 12.00- 01.30 — சுபநேரம் காலை 09.30 - 10.30 — எமகண்டம் காலை 07.30 - 09.30, 12-01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெருமை | உயர்வு | சாந்தம் | புகழ் | தேர்ச்சி | பாராட்டு | மேன்மை | அமைதி | ஆக்கம் | நலம் | அனுகூலம் | களிப்பு |

## கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் பாதுகாப்பு

மட்டக்களப்பு, ஏப். 18

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பணிப்புரைக்கு அமைய, தீகவாபி சயித்தியத்தை புனரமைக்கும் பணிகளைத் தொல்பொருள் திணைக்களம் ஆரம்பிக்க உள்ளது.

"தீகவாபி சயித்தியம் மக்களின் வழிபாட்டுக்கு உகந்தவாறு திருத்தி அமைக்கப்படும். இந்த புனரமைப்புப் பணிக்காக இரண்டு லட்சத்து 50 ஆயிரம் செங்கற்கள் பயன்படுத்தப்படும். இந்தப் பணிகள் நிறைவடைய ஐந்து வருடங்கள் எடுக்கும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் பி.பி.மண்டாவெல தெரிவித்துள்ளார். (ஆ)

## அமைச்சுப் பதவியை எதிர்க்கும் ஜே.வி.பி.





கொழும்பு, ஏப். 18

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு மீண்டும் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு மீண்டும் மாகாண கல்வி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமை, மிகவும் பாரதூரமான விடயம் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

பதுளையில் தமிழ் மகளிர் கல்லூரியின் அதிபர் ஒருவரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில், ஊவா மாகாண முதலமைச்சரிடம் இருந்து மாகாண கல்வி அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தற்போதும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு மீண்டும் மாகாண கல்வி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மாணவர் சேர்க்கையை தெளிவுபடுத்த நடவடிக்கை

கொழும்பு, ஏப். 18

தரம் ஒன்றில் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான தகவல்களை ஒழுக்க விதிமுறையுடன் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.



கல்வி அமைச்சில் சமீபத்தில் இடம்பெற்ற முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு தரம் ஒன்றில் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான சுற்றறிக்கை குறித்தும், நடைமுறைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

புள்ளிகள் வழங்கும் நடைமுறை மற்றும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் வதிவிடம் குறித்த தகவல்களை சமர்ப்பிப்பதில் பிரச்சனைகள் ஏற்படாதவகையில், தகமைகள் தொடர்பிலான தகவல்களை பகிரங்கப்படுத்துவது குறித்துக் கவனம் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்றில் மாணவர்களை உள்வாங்கும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதே இதன் நோக்கமாகும். போலியாக தயாரிக்கப்படும் ஆவணங்களை பயன்படுத்தி மாணவர்களை பாடசாலைக்கு சேர்த்துக்கொள்வதற்காக பெற்றோர் முயற்சிக்கின்றனர். இதன் காரணமாக உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, தரம் ஒன்றில் மாணவர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பான சுற்று நிருபத்தில் சில மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது தொடர்பிலும் பேசப்பட்டது. (ஆ)

## மட்டக்களப்பில் பஸ் தீக்கிரை

மட்டக்களப்பு, ஏப். 18

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி புணாணை 118 ஆவது மைல் கல்லுக்கு அருகாமையில் சொகுசு பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.



இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலனறுவை, மன்னம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த சாமர மதுசங்க புஸ்பகுமார என்பவருக்கு சொந்தமான குறித்த சொகுசு பஸ், கல்முனை நோக்கி பயணித்த சமயமே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பஸ் சாரதியும் நடத்துநரும் கல்முனைக்கு சென்று கொண்டிருந்த போது, புணாணை பிரதேசத்தில் வைத்து பஸ்ஸுக்கு ஒருவர் கல்லால் எறிந்துள்ளார். இதனை அவதானித்த சாரதி பஸ்ஸை வீதியோரமாக நிறுத்தியுள்ளார். இந்த நிலையில், பஸ்ஸுக்குஅருகில் வந்த நால்வர் இருவரையும் தாக்கி விட்டு பெற்றோல் ஊற்றி தீயிட்டு பஸ்ஸைக் கொளுத்தி உள்ளனர். இதனை அடுத்து, அவர்கள் இரண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று விட்டனர் என விசாரணைகளில் தெரிய் வந்துள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஆ)

## செங்கலடிப் பகுதியில் 200 டெங்கு நோயாளர்கள்

மட்டக்களப்பு,ஏப்.18

மட்டக்களப்பு - செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தற்போது வரை 200 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும், இதுவரை மரணங்கள் எதுவும் நிகழவில்லை என சுகாதார வைத்திய அதிகாரி இ.சிறிநாத் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற டெங்கு தெளிவூட்டல் கருத்தரங்கு நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"டெங்கு நோய் காரணமாக நாட்டில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் மட்டக்களப்பில் 3 இறப்புகள் பதிவாகியுள்ளன . இந்த மாவட்டத்தில் தற்போது டெங்கு பரவக்கூடிய இடங்களாக நீர்த் தாங்கிகள், கிணறுகள் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. டெங்கு நோயைக் கட்டுப்படுத்த சில இடங்களில் மனிதவளப் பற்றாக்குறை காணப்படுகிறது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# அமெ. உயர்மட்டக் குழு கொழும்பு வருகை





கொழும்பு, ஏப். 18

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் தரைப்படையைச் சேர்ந்த 17 அதிகாரிகளைக் கொண்ட குழு இலங்கை வந்துள்ளது. தரைப்படைகள் பசுபிக் திட்ட அமர்வுகளில் பங்கேற்கவே இந்தக் குழு கொழும்பு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவுக்குக் அமெரிக்க இராணுவப் பசுபிக் கட்டளை பீடத்தின் வடக்குப் பகுதி பிரதிக் கட்டளைத் தளபதியான அவுஸ்ரேலிய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ரோஜர் ஜே நோபிள் தலைமை வகிக்கிறார்.

இந்த நிலையில், பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பூர்வாங்க கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மேஜர் ஜெனரல் ரோஜர் ஜே நோபிள் உட்பட 17 அதிகாரிகளைக் கொண்ட குழு மற்றும் இலங்கை இராணுவத் தரப்பில் மேஜர் ஜெனரல்கள் டம்பத் பெர்னான்டோ, தனஞ்ஜித் கருணாரத்ன, அருண வன்னியாராச்சி, மேர்வின் பெரேரா, மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில், பரஸ்பர நலன் மற்றும் கரிசனைக்குரிய பிராந்திய மற்றும் ஏனைய விவகாரங்கள் குறித்துக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

"நிபுணத்துவ ஆற்றல் தொடர்பாகவும், அமெரிக்க பங்காளர் ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புடன் தொடர்புடைய இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களுக்கு தீர்வு காண்பது குறித்தும் கவனம் செலுத்தப்படும்" என்று மேஜர் ஜெனரல் ரோஜர் தெரிவித்தார். (ஆ)



# சிறுபான்மை மக்களை ஏமாற்றும் சிங்கள அரசியல் தலைவர்கள்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கரணாகரம் சாடல்

மட்டக்களப்பு, ஏப். 18

நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து இப்போதுவரை சிங்கள அரசியல் தலைவர்கள் சிறுபான்மை இன மக்களை ஏமாற்றிக் கொண்டே இருக்கின்றார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கோ. கருணாகரம் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மூன்று வருடங்களாக ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி எந்தவொரு உறுதி மொழியையும் நிறைவேற்றாத ஜனாதிபதியாகவே இருக்கின்றார். பதவிக்கு வரும் போது பல வாக்குறுதிகளைக் கொடுத்து வருவதும், பதவியில் அமர்ந்ததும் அடுத்த தேர்தலில் எவ்வாறு வெற்றி வாகை சூடலாம் என்று சிந்திப்பதுமாகவே இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் உள்ளார்கள்.

எமது உரிமைக்காகவும், எமக்காக ஒரு நாடு வேண்டும்என்றுதான் போராட்டம் நடைபெற்றது. ஆயுதப் போராட்டம் மௌனித்தாலும் நாங்கள் இன்றும் ஜனநாயக வழியில் போராட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். எமது உரிமைகள் மறுக்கப்படுமாக இருந்தால் தமிழ் மக்களின்போராட்டம் எந்த வடிவத்திலும் உருமாறலாம். எதிர்காலச் சந்ததியினர் இந்த ஜனநாயகப் போராட்டத்தை எந்தவிதத்தில் கையில் எடுப்பார்கள் என்று கூட எமக்குத் தெரியாமல் இருக்கின்றது.

2015 ஆம் ஆண்டுக்கு முன்பு பத்து வருடங்களாக இந்த நாட்டில் கொடுங்கோல் ஆட்சி நடைபெற்றது. இந்த நிலையில், புரையோடிப்போயுள்ள எமது இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கையில், புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை தமிழ் மக்கள் தெரிவு செய்தனர்.

தேர்தல் காலத்தில் 'இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வருவேன், ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பேன், பழைய முறையிலான தேர்தலை அறிமுகப்படுத்துவேன்' என்ற 3 உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கினார். இதில் எதுவும் நடைபெறாமல் மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. பழைய முறையிலான தேர்தல் முறையை கொண்டு வருவேன் என்று கூறிவிட்டு நடைபெற்ற உ[illegible]ாட்சி மன்றத் தேர்தலை பழைய மு[illegible]றயுமல்ல, புதிய முறையுமல்லாத ஒரு கலப்பு முறையிலான தேர்தலை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார். இப்போது இந்த தேர்தல் முறை இந்த நாட்டுக்கு உகந்ததல்ல என அவரே கூறுவது வேடிக்கையாக உள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# காணியை மீட்க செயற்பாட்டுக்குழு

முல்லைத்தீவு, ஏப். 18

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் படையினர் நிலைகொண்டுள்ள துயிலும் இல்லக் காணியை மீட்பதற்காக அந்தப் பகுதி மக்கள், செயற்பாட்டுக்குழு ஒன்றை அமைத்துள்ளனர்.

அளம்பில் பகுதியில் கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தங்கள் பிள்ளைகளின் உடலங்கள் புதைக்கப்பட்ட காணியில் படையினர் நிலைகொண்டுள்ளார்கள்என்றும் இதனைப் படையினருக்கு வழங்கவேண்டாம் என்றும் கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி பிரதேச மக்கள் கோரிக்கை மனு ஒன்றை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளார்கள்.

இந்த நிலையில், குறித்த காணியை மீட்பதற்காக பிரதேச மக்கள் செயற்பாட்டுக்குழு ஒன்றை அமைத்து அதன் ஊடாகச் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

படையினர் நிலைகொண்டுள்ள அந்தக் காணி, தனி நபர் ஒருவருக்குரியதென்றும், காணியைப் படையினருக்கு விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்த நிலையில், புலம்பெயர் தமிழ் மக்கள் அனைவரின் உதவியுடன் துயிலும் இல்லக் காணியை மீட்பதற்கு வழி சமைக்கவேண்டும் என்றும் செயற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.(ஆ)

# போலி நாணயத்தாளுடன் தர்மபுரத்தில் மூவர் கைது



தர்மபுரம், ஏப். 18

தர்மபுரம், புதுக்காடு பிரதேசத்தில் போலி நாணயத் தாளை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடம் இருந்து 500 ரூபா போலி நாணயத்தாள் ஒன்றும், மடிக்கணினி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வவுனியா, இராமநாதபுரம் மற்றும் வட்டக்கச்சி பிரதேசங்களைச் சேர்ந்த சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஆ)

# நூலக வாசகர் வட்டத்தின் உரை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப்.18

இந்த மாத இறுதியில் அனுஷ்டிக்கப்பட உள்ள உலகப்புத்தக நாளை முன்னிட்டு, யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் உரை நிகழ்ச்சி, எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணிக்கு யாழ்ப்பாணம்பொது சன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

வாசகர் வட்டத் தலைவர் அ. யேசுராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் 'புத்தகத்தின் வழிப் படம்' என்னும் தலைப்பில் ச. சத்தியதேவனும், 'எனக்குப் பிடித்த புத்தகங்கள் சில....' என்னும் தலைப்பில் குப்பிளான் ஐ. சண்முகனும், 'சமகால ஈழத்து இலக்கியச் செல்நெறி' என்னும் தலைப்பில் தி. செல்வமனோகரனும், 'வ. அ. இராசரத்தினம் படைப்புலகம்' என்னும்தலைப்பில்த. அஜந்தகுமாரும், 'கி. ராஜநாராயணன் படைப்புலகம்' என்னும் தலைப்பில் சோ. பத்மநாதனும் உரையாற்றுவார்கள். ஆர்வமுள்ள யாவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளலாம் என வாசக வட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

# மணி விழா

சாவகச்சேரி, ஏப். 18

தென்மராட்சியின் புகழ் பூத்த தமிழ் ஆசானும், இலக்கியவாதியுமான கவிஞர் த.நாகேஸ்வரனின் மணிவிழா வைபவம் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

கல்லூரி முதல்வர் சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், நூல் வெளியீடு மற்றும் பட்டிமண்டப நிகழ்வு ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

# ஊட்டச்சத்து குறைபாடு: இலங்கை 2 ஆம் இடம்

கொழும்பு, ஏப். 18

ஊட்டச்சத்து குறைபாட்டில் தென் ஆசியாவில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் தாபனம் தெரிவித்துள்ளது.

உலக உணவுத் தாபனத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பிலான, 2017 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2014 -2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இலங்கையில் உள்ள சனத்தொகைக்கமைய, 22.1 சதவீதமானோர் ஊட்டச்சத்து குறைபாடுடையவர்களாகக் காணப்படுகின்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# புறமுதுகு காட்டி ஓடின செம்மல் சிங்கப் புலிகளடா, நாங்கள்?

மீண்டும் கலவரம். நகரசபை வளாகத்திலை அடி தடி. வாய் தகராறு. ஒரே குழப்பநிலை. யாழ்ப்பாணத்திலை தேசியக் கட்சியளின்ரை கையைக் காலைப் பிடிச்சு வடிவாச் செய்து போட்டு ஏன்ரா வவுனியாவிலை எங்களை நடுத்தெருவிலை விட்டனீங்கள்? எங்கடை மானம் மரியாதை எல்லாம் காத்துக்கு மேலை உள்ள அண்டவெளிக்கும் அங்காலை பறந்திட்டுதெல்லே? எண்டு த.தே.கூ ஆக்கள் கத்திக் கத்தி........ நல்ல காலம் சுமோ மைனர் எஸ்கேப். மாவை சீனிலையும் இல்லை. அவருக்கு இருண்டு விடிஞ்சதும் தெரியாதாம். இதெல்லாம் நடந்தும் கலவரமடக்கிற பொலிஸ் சீனுக்கு வர இல்லை எண்டதுதான் முக்கியமான செய்தி!

சுமந்திரனோடையும், செல்வம் அடைக்கலநாதன், சத்தியலிங்கம், சிவாஜிலிங்கம் எல்லாரோடையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆக்கள் தர்க்கப்பட்டவை. கன நேரம் கூச்சலும், குழப்பமுமாத்தான் வவுனியா கிடந்திது. வவுனியா நகரசபையைப் பொறுத்தவரை சங்கரி வெண்டிட்டான். சங்கரி வெண்டதெண்டு சொல்லுறதைவிட சுரேஸ் நீ சாதிச்சாயெடா என்ரை குஞ்சுக் கண்ணா? வவுனியாவிலை மண்டையனைப் பற்றித் தெரியாததாலை மச்சான் நீ தப்பினாய்! உதிலை காலை வைச்சுக் கொண்டு இனி உன்னிப் பாயலாமெல்லே? ஓ கே, றை பண்ணு பாப்பம்!

யாழ்ப்பாணத்திலை தான் காதிலை பூ வைச்சிருக்கிற கந்தசாமியள் கனக்க இருக்கெண்டதுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை நினைவோ தெரியேல்லை? இண்டைவரைக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாய்ஞ்சுது, குத்துக் கரணம் அடிச்சிது. தலை கீழா நிண்டிது. நேரத்துக்கு நேரம் வாயாலை பொய் சொல்லிச்சிது. ஏன் நாய்? எண்டு யாழ்ப்பாணத்திலை ஒருத்தரும் கேக்கேல்லை. அதாலை கூட்டமைப்பு நினைச்சுக் கொண்டு இருக்கிது தங்களை ஊர் உலகம் ஏத்துக் கொண்டிருக்கிது எண்டு. ஆனால் கூட்டமைப்புக்காரற்றை கூத்து எல்லாத்தையும் சனம் டையறி போட்டு எழுதிக்கொண்டிருக்கிது எண்டு அவைக்குத் தெரியேல்லை..

கலவரம் துவங்கிவிட்டுது எண்ட உடனை சுமந்திரன்தான் முதலிலை எஸ்கேப். அவருக்குப் பின்னாலை துண்டைக் காணேல்லை துணியைக் காணேல்லை எண்டு ஓடினது செல்வம் அடைக்கலநாதன். ஆனால் சிவாஜி! "நீ ஒரு வீரனெடா. களம் கண்ட செம்மலடா. எத்தினை களத்தைக் கண்டிருப்பாய் நீ? எத்தினை பொலிஸ், எத்தின் ஆமி? எத்தினை பொதுப் பிரச்சினை? அதுக்கெல்லாம் கலங்காத நீ இதுக்கோ கலங்கப் போறாய்? மூண்டெழுத்து உன்னை நாலாம்மாடிக்கு வா எண்டு அழைத்தும், விரும்பினால் பெட்டி படுக்கையளோடை நீங்கள் தமிழ் மண்ணுக்கு வாருங்கள். சந்திப்போம் எண்டு சூளுரைத்த தமிழ் செம்மலெடா. நீயா கலங்குவாய் என்று நாம் எண்ணி தலை குனிவது? நீ தமிழ் ஈழத்தின்ரை தலை வணங்காப் புலியெடா. (இல்லாட்டி சிங்கமெண்டும் வைச்சுக் கொள்ளுவம். அதை அவை அவையைப் பொறுத்தது. நீங்கள் சிங்கமெண்டால் நாங்கள் புலி எண்ணுவம். விளங்கிதோ?) எண்டு என்ரை மனம் நினைச்சிது

அண்ணை! எங்கடை சிவாஜிதான் கடைசிவரையும் நிண்டு கூட்டமைப்பின்ரை வேட்டியைக் காத்திலை பறக்கவிடாமல் காப்பாற்றினது. புறமுதுகு காட்டி ஓடின சுமந்திரனையும், அடைக்கலத்தையும் தமிழ் ஆக்கள் என்னெண்டு இனி நம்பிறது. இனிமேல் கலவரம் எண்டு ஒண்டு வந்தால் உவங்கள் தமிழ் சனத்தை நடுத்தெருவிலை விட்டிட்டு ஓடிவிடுவங்கள் இனி நான் ஒரு சதத்துக்கும் நம்பமாட்டன் எண்டு சொல்லுறான் முதலி.

அதுக்குப் பதிலடி குடுக்கிறமாதிரி சுமந்திரன் சொல்லுறார். உதுகும் ஒரு அரசியல் சாணாக்கியம் எண்டு. ஆரேன் கத்தேக்கையும், அடிக்க வரேக்கையும் ஒண்டில் ஓட வேணுமாம். இல்லாட்டி வடிவேலுமாதிரி நிண்டு அடியை வேண்ட வேணுமாம். அப்ப அடி வேண்டத் தைரியம் இல்லை எண்ட படியாலை ஓடித் தப்பலாமெண்டு சம்பந்தன்தான் சொல்லித் தந்தவர் எண்டு சுமோ சொல்லுறார்.

இதுக்கை தமிழர் கூட்டணிக்கு ஈபிடிபி சப்போட் பண்ணிப் போட்டுது எண்டு அவையை தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை ஆள் பட்டைத் துஷணத்தாலை கேளாத கேள்வியாம். யாழ்ப்பாண ஈபிடிபியைப் பாருங்கோவனெடா. அவங்கள் தான் மனுசர். எவ்வளவு பொறுப்பா எங்களுக்குச் சப்போட் பண்ணிப் போட்டு இருக்கிறாங்கள். இஞ்சை பாத்தால் நீங்கள் எங்களைக் கவிட்டுக் கொட்டிப் போட்டியளெடா..... பு................ஆ...........ளெடா நீங்கள்.

இதுக்கை ஐ.தே.க வின்ரை பொம்பிளைப் பிள்ளையைக் கடத்திக் கொண்டு போய்த்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரா வாக்களிக்கச் செய்தவராம் றிப்கான் நா்னா எண்டு வவுனியா அமைப்பாளர் கருணதாச அய்யா வலு கோவத்திலை இருக்கிறாராம். ஆனால் அதை றிப்கான் நானா பொய் எண்ணுறார். ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு போய் வேறை எதையும் செய்யலாமலே ஒழிய வாக்களிக்க வைக்கலாம் எண்டு எனக்குத் தெரியேல்லை எண்ணுறான் முதலி.

எது என்னெண்டாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கத் தோல்வியோ இல்லையோ? சித்தருக்கும் ஒருவகையிலை உது அடிதான் எண்டது எங்கடை அபிப்பிராயம். சீனக் கோட்டை மதில் மாதிரி கட்டி அதிகாரம் பண்ணி எத்தினை திருகுதாளம் பண்ணிக் கொண்டிருந்த சித்தருக்கு நாடி விழுந்தமாதிரி, இப்ப தாடியை வளத்துக் கொண்டு துறவி மாதிரி தான் ஊர் உலகத்திலை ஒரு பாதகமும் செய்யாத மாதிரி எல்லாத்திலையும் கிரிசாம்பாளுக்கு நடிச்சுக் கொண்டு...? பாரன் ஆளை. தமிழ் நாட்டிலை இருந்து போன கிழமையும் ஆக்கள் வந்தவங்களாம்.அவரை நடிக்கக் கேக்க! பாரன் நேரத்தை?

- வில்லங்கம் விநாசி

எதிரொலி
Ethiroli

புதன், 18 ஏப்ரல் 2018

# தொடர்ச்சிகள்

## மயிலிட்டி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வலி.வடக்கு மயிலிட்டி உட்பட 3 கிராம சேவையாளர் பிரிவில் 683 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது. அந்தப் பகுதிகளை நேற்றையதினம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராஜா உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

அதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பகுதி விடுவிப்பு, காணி விடுவிப்பின் மிக முக்கியமான கட்டமாக கருதுகின்றோம். இதிலும் சில பிரச்சினைகள் இன்னும் இருக்கின்றன. சிறிய இராணுவ முகாம்கள் வீதிகளை மறித்து நடுவில் இருக்கும் காரணத்தினால், சில அசௌகரியங்கள் தொடர்ந்தும் இருக்கின்றது.

அந்த அசௌகரியங்களையும் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம். மயிலிட்டி பிரதேசம் ஒரு போதும் விடுவிக்கப்படமாட்டாது என சொல்லப்பட்ட பிரதேசம்.

இந்த ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு கூட மயிலிட்டி மற்றும் மயிலிட்டி துறைமுகப் பிரதேசம் விடுவிக்கப்படமாட்டாது என உறுதியாக கூறப்பட்டிருந்தது.

ஆனால், மயிலிட்டி துறைமுகம் விடுவிக்கப்பட்ட காலத்தில் இந்தப்பகுதி முழுவதும் விடுவிக்கப்பட வேண்டுமென கேட்டிருந்தோம். அதற்கமைய இந்தப் பிரதேசமும், வீதிகளும் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

கடந் 28 வருடங்கள் மக்கள் வாழாத பிரதேசம் என்ற காரணத்தினால், இந்தப் பகுதிகளில் நிறைய வேலைத்திட்டங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றது. பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருப்பதனால், அரசாங்கம் இந்த வேலைத்திட்டத்துக்கான நிதிகளை உடனடியாக கொடுக்க வேண்டும்.

அரசாங்கம் தமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் அதே நேரம் அரசியல்கட்சியாகிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஒரு சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உத்தேசித்திருக்கின்றோம்.

மேல்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் இந்த காணி விடுவிப்புக்கு ஒரு காரணியாக இருக்கின்றது. 6 ஆயிரத்து 348 ஏக்கர் காணிகளையும் விடுவிக்க மறுத்து, இராணுவ நடவடிக்கைகளுக்காக சுவீகரிப்பு செய்வதற்கு பல நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், சுவீகரிப்பதற்கான அறிவித்தல்களையும் ஒட்டியிருந்தார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பாக மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு உதவி செய்வதற்கான செயலணி ஒன்று நிறுவப்படவுள்ளது. அந்த செயலணியினை வலி.வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன் நிர்வகிப்பார்.

அரசாங்கம் கொடுக்கும் உதவிகளுக்கு அப்பால், தேவைப்படும் ஏனைய உதவிகளை எமது உறவுகளிடம் இருந்து பெற்று மீள்குடியேறிய மக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேநேரம், ஏனைய பகுதிகளையும் விடுவிப்பதற்கான நடவடிக்கையினை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## வவுனியா வடக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஜெ.ஜெயரூபன் போட்டியிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வாக்களித்தன.

இந்நிலையில், போட்டியிட்ட இருவருக்கும் சரிசமமாக 11 வாக்குகள் கிடைக்கப்பெற்ற நிலையில், திருவுளச்சீட்டின் மூலம் தவிசாளரை தெரிவு செய்வதென தீர்மானிக்கப்பட்டு அதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வாக்களிப்பின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடுநிலைமை வகித்திருந்தது.

அத்துடன் பிரதி தவிசாளர் பதவிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நா.யோகராசா, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் காமினி போட்டியிட்டனர்.

இந்நிலையில், கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட நா.யோகராசா 14 வாக்குகளைப் பெற்று பிரதி தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட காமினி 6 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

பிரதி தவிசாளரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

நெளுக்குளத்தில் அமைந்துள்ள பிரதேச சபைக் கட்டடத்தில் நேற்று பிற்பகல் நடந்த அமர்வில் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பாக துரைச்சாமி நடராஜசிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் த.சிவராசா போட்டியிட்டனர்.

வாக்கெடுப்பில் துரைச்சாமி நடராஜசிங்கம் 14 வாக்குகளைப் பெற்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். அவரை எதிர்த்து போட்டியிட்ட த.சிவராசா 13 வாக்குகளைப் பெற்றார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த ஒருவர், நடுநிலை வகித்திருந்த நிலையில் இருவர் வாக்களிக்கவில்லை.

உப தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த வெள்ளைச்சாமி மகேந்திரன் 15 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த எஸ்.குகதாசன் 14 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார்.

11 ஆசனங்களைக் கொண்ட கூட்டமைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரும், சுயேச்சை உறுப்பினர்கள் இருவரும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

## விரிவுரைகள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதி வசதி பெற்றுக்கொண்ட மாணவர்கள் அனைவரும் 21,22ஆம் திகதிகளில் (சனி, ஞாயிற்றுக்கிழமை) விடுதிக்கு திரும்ப முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒரே நாளில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மீன்கள் பாரை இனத்தைச் சேர்ந்தவைகள் எனவும் அவற்றின் இன்றைய சந்தைப் பெறுமதி ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமானது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கனடாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு ஒன்றின் உதவியுடன் அடையாளம் காணப்பட்டதாக கனேடிய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர் 2010ம் ஆண்டு இலங்கையில் இருந்து கனடாவுக்கு இடம்பெயர்ந்துள்ளார். 2015ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கிருஷ்ணகுமார் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என கனடாவின் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் சன்சீ கப்பல் மூலம் கனடாவுக்கு சென்றுள்ளார். அங்கு ஸ்காபுரோவில் வாழ்ந்து வந்துள்ளார்.

ஏற்கனவே ஸ்கந்தராஜா நவரட்ணம் என்ற இலங்கையர் உள்ளிட்ட எட்டுப் பேரை கொலை செய்தமைக்காக கடந்த ஜனவரி மாதம் ப்ரூஸ் மெக்ஆர்தர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## சுதாகரனை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சில் வைத்து இந்த மனு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகளும் சேர்ந்து பதில் முதலமைச்சரிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா புவனேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மனுவைப் பெற்றுக்கொண்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கருத்துரைக்கையில்,

புத்தாண்டுக்கு முன்னர் உங்களுடைய அப்பாவோடு நீங்கள் சேருவீர்கள் என்று ஜனாதிபதி வெளிப்படையாக சொல்லியிருந்தார். ஆயினும் தன்னுடைய வார்த்தையை அவர் காப்பாற்றத் தவறிவிட்டாரா அல்லது இன்னும் காலம் இருக்கிறதா? என்று தெரியவில்லை.

என்னைப்பொறுத்தவரை இந்தக் கையெழுத்துக்கள் எங்களுக்குத் தேவைப்படாது என்றுதான் முதலில் எண்ணியிருந்தேன். ஜனாதிபதி இவ்வாறு வெளிப்படையாக கூறியதற்கமைவாக ஆனந்தசுதாகரன் விடுவிக்கப்படுவார் என்று நம்பியிருந்தோம்.

ஒவ்வொரு குடியரசு தினத்தின் பொழுதும்,சுதந்திர தினத்தின் பொழுதும் பெருமளவு குற்றவாளிகளை மன்னித்து விடுதலை செய்யும் ஜனாதிபதி இவ்விடயத்தில் அதிக கருணையுடன் செயற்பட வேண்டும்.

கண்டிப்பாக நீங்கள் வழங்கியிருக்கும் இந்தக் கையெழுத்துக்களுடன் சென்று ஜனாதிபதியையும், வெளிநாட்டுத் தூதுவர்களையும் சந்தித்து இந்த கையெழுத்துக்கள் அடங்கிய மனுவை கொடுத்து இதற்கான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு என்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன்.

எங்களிடம் போராட்ட உணர்வுகள் மழுங்கிப்போய் விட்டனவோ என்று நாங்கள் சந்தேகிக்கின்ற அளவுக்கு பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

அதனால் மனவருத்தப்படுகின்ற நிலைமையும் இருந்திருக்கினறன.

ஆனால் நீதிக்காக குரல்கொடுக்கின்ற போராட்ட குணம் இன்னும் எங்களிடம் அப்படியே இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்ற வகையில் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்ட கல்விப்புலத்திலிருந்து மூன்று லட்சம் கையெழுத்துக்களைத் திரட்டுவதற்கு பலர் உழைத்திருக்கின்றீர்கள்.

அந்த மூன்று லட்சம் கையெழுத்துக்களை இட்டவர்கள் அனைவருக்கும் குறிப்பாக இந்த முயற்சிகளை முன்னெடுத்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.

கண்டிப்பாக உங்களுடைய உழைப்புக்களுக்கு முழுமையாக அதியுச்சப்பயனை பெறக்கூடிய வகையில் இந்த கையெழுத்துக்களை பயன்படுத்துவோம் என்றார்.

இந்த மனு கையளிக்கும் நிகழ்வில் ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வலய கல்விப்பணிப்பாளர்கள் மாகாண கல்விப்பணிப்பாளர்,கல்வி அமைச்சின் அதிகாரிகள் உட்பட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்

## இலங்கைக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கப்பட்ட நிதியை வழங்க முடியுமென அமெரிக்க காங்கிரஸ் கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் கடந்த மாதம் கையெழுத்திடப்பட்ட நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு அங்கீகாரம் அளித்துள்ள அமெரிக்க காங்கிரஸ், இந்த நிதியை இலங்கைக்கு வழங்குவதற்கே மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கூறியுள்ளது.

இலங்கையின் ஜனநாயக திட்டங்களுக்கு 35 மில்லியன் டொலரை அமெரிக்கா ஒதுக்கியுள்ளது. காணாமல் போனோர் விவகாரத்துக்கு தீர்வு காணுதல் மற்றும் அடையாளம் காணுதலுக்கு உதவும் திட்டங்களுக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதியைப் பெறுவதற்காக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்துக்கு அமைய, நம்பகமான நீதிப் பொறிமுறையை இலங்கை உருவாக்கியுள்ளது என்றும், சித்திரவதைகள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படுவதாகவும், இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகள் மீளளிக்கப்படுவதாகவும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வரவு-செலவுத் திட்ட குழுக்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காணாமல் போனோர் பணியகம் உருவாக்கப்பட வேண்டும், ஆயுதப் போரின் முடிவில் சரணடைந்தவர்களின் பட்டியலை வெளியிட வேண்டும், வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரைக் குறைக்க வேண்டும், ஆயுதப்படைகளை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் என்றும் ஆயுதப்படைகளின் அளவைக் குறைக்க வேண்டும் என்றும் நிபந்தனைகளை விதித்துள்ளது அமெரிக்க காங்கிரஸ்.

இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கான உதவி 5 இலட்சம் டொலர்களாக குறைக்கப்பட்டுள்ளதுடன், ஒதுக்கப்பட்ட இந்த நிதியை மனிதாபிமான மற்றும் அனர்த்த முகாமைத்துவ, பயிற்சி, கடல்சார் பாதுகாப்புக்கு மாத்திரமே செலவிட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

பாலியல் அத்துமீறல்களில் ஈடுபட்ட இலங்கைப் படையினரை, நீதியின் முன் நிறுத்த இலங்கை அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரமே, அனைத்துலக அமைதிகாப்பு நடவடிக்கையுடன் தொடர்புடைய பயிற்சி மற்றும் கருவிகளுக்கான எந்தவொரு அமைதிப்படை நிதியையும் வழங்க முடியும் என்றும் அமெரிக்க காங்கிரஸ் கூறியுள்ளது.

## கடமையை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது, வடக்கு மாகாண ஆளுநராக இருந்த றெஜினொல்ட் கூரே, மத்திய மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மீளவும் வடக்கு ஆளுநராக றெஜினோல்ட் கூரே நியமிக்கப்பட வேண்டும் என பல தரப்பினரும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய வடக்கு ஆளுநராக றெஜினோல்ட் கூரேயை மறு நாளே ஜனாதிபதி மீளவும் நியமித்திருந்தார்.

இந்தநிலையில் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த கூரேக்கு பலாலியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ் மாவட்டச் செயலகம் முன்பாக அமைந்துள்ள மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு வந்த அவர், வரவேற்கப்பட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநருக்கான தன்னுடைய கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றார்.

இதன் போது கருத்து வெளியிட்ட ஆளுநர் றெஜினோல்ட் கூரே, வடக்கிலுள்ள பலரதும் வேண்டுகோளுக்கமையவே நான் மீளவும் இங்கு வத்துள்ளேன். நான் இங்கு செய்ய வேண்டிய கடமைகள் நிறையவே உள்ளன. அவற்றை செய்வதற்காக அத்தனை நடவடிக்கைகளையும் முன்னெடுக்க உள்ளேன் என்று கூறினார்.

## எனக்கெதிராக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு எவருக்கும் உரிமை உண்டு என்கின்ற போதிலும், அவ்வாறான செயல் நாகரிகமற்ற ஒன்றாகும். உலகில் வேறு எந்த நாட்டிலும் இவ்வாறான செயல் இடம்பெறுவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒரு சாராரின் நலனை மாத்திரம் கருத்திற்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் செயற்படுவதாகவும், அரசாங்கத்துக்கு சார்பாக செயற்படுவதாகவும் தெரிவித்து மஹிந்த ஆதரவு பொது எதிரணி சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி அடுத்த நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ள நிலையில், அதற்குப் பின்னர் குறித்த நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவரவுள்ளதாகவும், இது தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி வருவதாகவும் ஒன்றிணைந்த எதிரணி குறிப்பிட்டுள்ளது.

## சிதறுகிறது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர் தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

அதன்படி அவர்கள் அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சி வரிசையில் அமர உள்ளனர்.

இந்நிலையில் தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகிக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இது தொடர்பில் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர உள்ளதாகக் கூறினார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர் விலகிக் கொண்டதன் காரணமாக தேசிய அரசாங்கம் மேலும் பலமடைந்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலின் பண்டார கூறினார்.

## மகிந்தவுடன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதிகளவான மக்களினால் வாக்களிக்கப்பட்டு கூடுதலான அங்கத்தவர்களை கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வவுனியா வடக்கில் அதிர்ஷ்டத்தின் மூலம் நீதி கிடைத்துள்ளது.

எங்களை வன்னி மண்ணிலே அழித்து ஒழித்து நிர்க்கதியாக்கிய பொதுஜன பெரமுனவுக்கும் அதனோடு சேர்ந்து ஆதரவு தெரிவித்தவர்களுக்கும் தோல்வி ஏற்பட்டுள்ளது.

எங்களை முற்றாக ஒழிக்க நினைக்கும் மகிந்த ராஜபக்சவுடனும், அவரின் சின்னத்திலும் நின்று ஆட்சியை பிடிக்க நினைப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பழைய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த புதிய கூட்டு உடன்படிக்கை கையெழுத்திடப்படவுள்ளது.

கொமன்வெல்த் உச்சி மாநாட்டில் பங்கேற்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டன் சென்றுள்ளார். எதிர்வரும் 22ஆம் திகதி அவர் நாடு திரும்பவுள்ளார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இரண்டு கட்சிகளும் இணைந்து முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கியதாக இந்த உடன்பாடு அமையும். கடந்த காலத்தில் ஏற்பட்டது போன்ற சிக்கல்கள் ஏற்படாத வகையில் புதிய வழிகாட்டல் முறைகளையும் இந்த உடன்பாடு கொண்டிருக்கும்.

புதிய உடன்பாட்டைத் தயாரிக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் சரத் அமுனுகம தலைமையிலான குழு ஈடுபட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# வெள்ளத்தில் சிக்கி 9 பேர் உயிரிழப்பு!

டார் ஏஸ் சலாம், ஏப்.18

தன்சானியா நாட்டின் டார் ஏஸ் சலாம் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி, 9 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தன்சானியா நாட்டின் தலைநகர் டார் ஏஸ் சலாம் பகுதியில் கடந்த சில தினங்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், அந்த நகரில் உள்ள வீடுகளிலும், வீதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

மூன்று நாட்களாகப் பெய்த கன மழையால் நகரின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பலர் வீடுகளின் மேற்கூரையில் தங்கி உள்ளனர். நகரில் உள்ள முக்கிய வீதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால், பஸ் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஆ)

# இரசாயனத் தாக்குதல்: நீதி விசாரணை தேவை!



கெய்ரோ, ஏப்.18

சிரிய மக்கள் மீது இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக சர்வதேச அளவிலான சுதந்திரமான நீதி விசாரணை தேவை என சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகள் அமைப்பு வலியுறுத்தி உள்ளது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள டூமா நகரில் கடந்த வாரம் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஏராளமான குழந்தைகள் உட்பட 70க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதற்கு சவுதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகள் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

'சிரிய மக்கள் மீது இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் மீது சர்வதேச சட்ட விதிமுறைகளின்படி கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பிறநாடுகளின் விவகாரங்களில் ஈரான் தலையிடுவதையும் கண்டிக்கிறோம். இரசாயன ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பதிலடியாக அமெரிக்கக் கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதலை ஆதரிக்கிறோம்' என்று அரபு நாடுகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஆ)

# முதலமைச்சர் ஜெயலலிதா முன்னரே இறந்திருக்கலாம்



சென்னை, ஏப்.18

மக்களுக்கு அறிவிக்கபட்டதற்கு பல மணி நேரத்துக்கு முன்பே, முன்னால் முதலமைச்சர் ஜெயலலிதா இறந்திருக்கலாம் என மருத்துவர் சுதா சேஷய்யன் கூறியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது .

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பில் பல சர்சைகளும் சந்தேகமும் இருப்பதாக தமிழக ஆளும் மற்றும் எதிர்க்கட்சி தரப்பில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இதனை அடுத்து, தமிழக ஆளும் கட்சித் தரப்பு சட்ட வல்லுநர் ஆறுமுகசாமி தலைமையில் தனிநபர் விசாரணைக் குழு அமைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மருத்துவர் சுதா சேஷய்யன் அடங்கிய எட்டுப்பேரும், ஆறுமுக சாமி விசாரணை ஆணையத்தில் சாட்சி அளித்தனர். அவர்களை சசிகலா தரப்பு வழக்கறிஞர் ராஜாசெந்தூரபாண்டியன், குறுக்கு விசாரணை செய்தார். அந்த விசாரணையின் போது மருத்துவர் சுதா சேஷய்யன் ஒரு திடுக்கிடும் தகவலை தெரிவித்துப் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

ஜெயலலிதா உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டதற்கு 14 மணி நேரத்துக்கு முன்பே அவர் மரணமடைந்திருக்க வாய்ப்பிருப்பதாக அவர் அங்கு தெரிவித்துள்ளார். (ஆ)

# ஊடகம், இலக்கியத்துக்கான புலிட்சர் விருதுகள் அறிவிப்பு

நியூயோர்க், ஏப். 18

ஊடகவியல், இணைய ஊடகம், இலக்கியம் மற்றும் இசையமைப்பு ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்காக வழங்கப்படும் புலிட்சர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன .

மிகவும் உயர்வாகக் கருதப்படும் புலிட்சர் விருதுகள் நேற்றுமுன் தினம் அறிவிக்கப்பட்டன.

அமெரிக்கப் பத்திரிகையாளரும், செய்திப்பத்திரிகை வெளியீட்டாளருமான ஜோசேப் புலிட்சரின் பெயரில் கடந்த 1912 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஊடகவியல், இணைய ஊடகம், இலக்கியம் மற்றும் இசையமைப்பு ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்க ஊடகங்களான நியூயோர்க் டைம்ஸ், வொஷிங்டன் போஸ்ட், நியூயோர்கெர், பிரெஸ் டெமோக்ரட், அரிசோனா ரிபப்ளிக், யு.எஸ்.ஏ டுடே, தி சின்சின்னாட்டி என்கொயர், ரோய்டர்ஸ், அலபாமா, நியூயோர்க் மேகசின், தி டெஸ் மோனிஸ் ரெஜிஸ்டெர் ஆகியவை பல்வேறு பிரிவுகளில் விருதுகளை வென்றுள்ளன.

இதில் ரோய்சேல் காட்ஸி கான்ஷா, ஜோன் ஹெல்பெர்ன், மிச்சேல்ஸ்லோன் ஆகிய ஊடகவியலாளர்களும் விருதுகளை வென்றுள்ளனர்.




மேலும், ஆண்ட்டு சீன் கீர் எழுதிய 'லெஸ்' என்ற புத்தகம், வரலாற்றுப் பிரிவில், ஜேக் டேவிஸ் எழுதிய 'தி கல்ப்: மேக்கிங் ஆப் அன் அமெரிக்கன் சீ' என்ற புத்தகமும், வாழ்க்கை வரலாற்றுப் பிரிவில் கரோலின் ப்ராசெர் எழுதிய 'ப்ராய்ரி பயர்: தி அமெரிக்கன் ட்ரீம்ஸ் ஆப் லாவ்ரா' என்ற புத்தகமும், கவிதைப் பிரிவில் ப்ராங் பிதார்ட் எழுதிய 'ஹால்ப் லைட்' என்ற புத்தகமும் விருதுகளை வென்றுள்ளன.

இதேவேளை, மார்டைனா மஜோக் எழுதிய 'கொஸ்ட் ஆப் லிவிங்' என்ற நாடகமும், கெண்ட்ரிக் லாமர் எழுதிய ' டாம்ன்' என்ற அல்பம் சிறந்த பாடல் விருதையும் வென்றுள்ளன. (ஆ)

# அழகுசாதனப் பொருட்களில் மனித, விலங்குக் கழிவுகள்!

வொஷிங்டன், ஏப்.18

அமெரிக்கா லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள பூட்லெக்ம் என்னும் நிறுவனம் விற்பனை செய்யும் அழகு சாதனப் பொருட்களில் விலங்கு மற்றும் மனிதக்கழிவுகள் இருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிறுவனத்தின் அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்தியவர்களுக்கு தோல் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தெரிவித்து வந்தனர். இதனை அடுத்து, குறித்த நிறுவனப் பொருட்களை பயன்படுத்தி பாதிக்கப்பட்ட ஒருவரின் முறைப்பாட்டின் அடிப்படையில், பொலிஸார் குறித்த நிறுவனத்தின் பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடைக்கு ரகசியமாகச் சென்றனர். தொடர்ந்து வாடிக்கையாளர்கள் போன்று மலிவு விலையில் விற்கப்பட்ட அழகு சாதனப் பொருட்களை அவர்கள் வாங்கிச் சென்றனர்.

இந்த நிலையில், அவற்றைச் சோதனைக்குட்படுத்தியதில் அபாயகரமான பக்டீரியாக்கள் மற்றும் மனித, விலங்குக்கழிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்து, லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள 21 கடைகளில்இருந்து 4.5 கோடி ரூபா மதிப்பிலான அழகு சாதனப் பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் இந்த மோசடியில் ஈடுபட்ட 6 பேரையும் கைது செய்துள்ளனர். (ஆ)

# கிரகங்களைக் கண்டுபிடிக்க புதிய விண்கலம்


வொஷிங்டன், ஏப். 18

பூமி போன்ற கிரகங்களை கண்டு பிடிக்க நாசாவின் புதிய விண்கலம் நேற்றுமுன்தினம் மாலை புளோரிடாவின் கேப்கனவரல் தளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாசா மையம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சூரியனுக்கு அப்பால் உள்ள பூமி போன்று வாழத் தகுதியுடைய புதிய கிரகங்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் தற்போது இறங்கியுள்ளது.

அதற்காக 'டி.இ.எஸ்.எஸ்.' என்ற புதிய விண்கலத்தை உருவாக்கியுள்ளது. இந்த விண்கலத்தில் அதிசக்தி வாய்ந்த டெலஸ்கோப் மற்றும் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

2 ஆயிரத்து 200 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட இந்த விண்கலம் புளோரிடாவின் கேப்கனவரல் தளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது. 'ஸ்பேஸ் எக்ஸ் பால்கன் 9' ரொக்கெட் இந்த விண்கலத்தைச் சுமந்து சென்றது.



விண்வெளியில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இந்த விண்கலம் 2 ஆண்டுகள் செயற்படும். அது 2 லட்சம் ஒளிரும் நட்சத்திரங்களையும், புதிய கிரகங்களையும் கண்டுபிடிக்கும் என நாசா விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மேலும் , சூரியனுக்கு அப்பால் மறைந்து கிடக்கும் 20 ஆயிரம் புதிய கிரகங்களை கண்டுபிடிக்க முடியும். அதில் பூமி அளவில் 50 புதிய உலகங்களும் அடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஆ)

# நவாஸின் பேச்சுக்கு பாகிஸ்தானில் தடை

இஸ்லாமாபாத், ஏப். 18

நீதிபதிகளுக்கு எதிரான நவாஸ் ஷெரீஃபின் பேச்சுக்களை ஊடகங்களில் ஒலிபரப்ப 15 நாட்களுக்குத் தடைவிதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லாகூரில் உள்ள உயர் நீதிமன்றத்தில் நீதிபதி மஸாகிர் அலி தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வில் இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

அதில், முன்னாள் பிரதமர் நவாஸ், அவரது மகள் மரியம் நவாஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் நீதிமன்றத்துக்கு எதிராகவோ அல்லது நீதிபதிகளுக்கு எதிராகவோ பேசிய எந்தவொரு செய்தியையும் தொலைக்காட்சி உள்ளிட்ட அனைத்து மின்னணு ஊடகங்களும் 15 நாட்களுக்கு ஒலிபரப்பு செய்யத் தடை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், அவர்கள் கூறிய சர்ச்சைக்குரிய கருத்துகள் தொடர்பாக நிலுவையில் உள்ள முறைப்பாடுகள் தொடர்பான அனைத்து அறிக்கைகளையும் 15 நாள்களுக்குள் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என மின்னணு ஊடகக் கண்காணிப்புக் கட்டுப்பாட்டு அமைப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஆ)



# மும்பைக்கு முதல் வெற்றி




மும்பை, ஏப். 18

இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரின் முதல் வெற்றியை சொந்த மண்ணில் ருசித்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

மும்பை இந்தியன்ஸ் அணியும், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியும் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி பந்துவீச முடிவு செய்தது.

சூர்ய குமார் யாதவும், எவின் லீவிஸும் மும்பை அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். டெல்லி அணிக்கு எதிரான கடந்த போட்டியில் இருவரும் அதிரடியாக ஆடியிருந்தனர். இதனால், அவர்கள் மீது பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் பெங்களூர் அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் முதல் பந்திலேயே சூர்ய குமார் யாதவை வெளியேற்றினார். அடுத்த பந்தில் இஷான் கிஷான் விக்கெட்டையும் எடுத்து மும்பை அணிக்கு பெரும் அதிர்ச்சி அளித்தார் உமேஷ் யாதவ்.

அடுத்து வந்த கப்டன் ரோகித் சர்மா, லீவிஸுடன் கைகோர்த்தார். முதல் இரண்டு விக்கெட்டுகள் அடுத்தடுத்து இழந்த போதிலும் லீவிஸ் தனது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 42 பந்துகளில் 65 ஓட்டங்களை (பவுண்டரி 6, சிக்ஸ் 5) விளாசினார்.

இவர்களது இணைப்பாட்டத்தை உடைக்க விராட் கோஹ்லி, கோரி அன்டர்சனை பந்துவீச அழைத்தார். அப்போது, லீவிஸ் பந்தை சிக்ஸருக்குத் தூக்கி அடிக்க நினைத்து விக்கெட்டை பறிகொடுத்தார். மூன்றாவது விக்கெட்டுக்கு இந்த இணை 108 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் களமிறங்கிய குருனல் பாண்டியா 15 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன்-அவுட் ஆனார். ஐ.பி.எல். போட்டி தொடங்கியதில் இருந்து ஆட்டத்திறன் இன்றித் தவித்துவந்த மும்பைக் கப்டன் ரோகித் சர்மா நேற்றைய போட்டியில் சிறப்பாக ஆடினார். 20 ஓவர் முடிவில் மும்பை அணி 6 விக்கெட் இழப்புக்கு 213 ஓட்டங்கள் குவித்தது. ரோகித் சர்மா 52 பந்தில் 94 ஓட்டங்கள் குவித்து சதத்தை தவறவிட்டார்.

பின்னர் 214 என்னும் இமாலய இலக்கை அடைவதற்காக பெங்களூர் அணியின் விராட் கோஹ்லியும், டீ கொக்கும் களமிறங்கினர். ஆனால் எதிர்பார்த்ததைப் போல இவர்கள் ஓட்டங்களைக் குவிக்க மும்பைப் பந்துவீச்சாளர்கள் அனுமதிக்கவில்லை. டீ கொக் 19 ஓட்டங்களுடன் மக்லீனன் பந்தில் வெளியேறினார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட டீவில்லியர்ஸ் வெறும் ஒரு ஓட்டத்தோடு அடங்கினார். ஒரு முனையில் விராட் கோஹ்லி போராடிக் கொண்டிருக்க மறுமுனையில் பெங்களூர் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்த வண்ணமிருந்தனர். மண்டீப் சிங் 16, கோரி அண்டர்சன் 0, வாஷிண்டன் சுந்தர் 7, சர்பரஸ்கான் 5, வோக்ஸ் 11, உமேஷ் யாதவ் 1 எனச் சொற்ப ஓட்டங்களில் வீழ, பெங்களூர் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க முடிந்தது. இதனால் 46 ஓட்டங்களால் மும்பை அணி, மூன்று தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து வாகை சூடியது. பந்து வீச்சில் குருனல் பாண்டியா 3 விக்கெட்டுக்களையும், பும்ரா , மக்லீனன் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக மும்பையின் ரோகித் சர்மா தெரிவுசெய்யப்பட்டார். (அ)

## கட்டைக்காடு கிரிக்கெட் தொடர்:
# சம்பியனானது பிங்பொங் வி.க.



யாழ்ப்பாணம், ஏப். 18

கட்டைக்காடு சென். மேரிஸின் கிரிக்கெட் தொடரில் அம்பன் பிங்பொங் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வெள்ளிநிலா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அம்பன் பிங்பொங் விளையாட்டுக் கழகம் மோதியது.

10 ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வெள்ளிநிலா விளையாட்டுக் கழகம், 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 55 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 56 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய பிங்பொங் விளையாட்டுக் கழகம் 9.4ஆவது ஓவரில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 56 ஓட்டங்களைச் சேர்த்து நான்கு விக்கெட்டுகளால் வெற்றியைத் தனதாக்கியது. (ஐ-20)

# விலகினார் பொதாஸ்

கொழும்பு,ஏப்.18

இலங்கை கிரிக்கட் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக பணியாற்றும் நிக் பொதாஸ் அந்தப் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த 13ம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

# மனக்கஷ்டத்தில் உசைன் போல்ட்



கிங்ஸ்டன்,ஏப்.18

உலகின் அதிவேக மனிதராக வர்ணிக்கப்படும் உசேன் போல்ட்டின் ஓய்வின் பின்னர், ஜமைக்கா அணி எதிர்கொண்ட மிகப்பெரிய விளையாட்டு தொடரான பொதுநலவாய விளையாட்டு போட்டியில், அந்நாட்டுக்கு ஒரு தங்கப்பதக்கம் கூட கிடைக்காதது அவரை மனக் கஷ்டத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவுஸ்ரேலியாவின் கோல் கோஸ்ட் நகரில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுத் தொடரில், ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஜமைக்கா சார்பில் போட்டியிட்ட யோகன் பிளேக்கே தங்கப் பதக்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவருக்கு அதிர்ச்சி அளித்த தென்னாபிரிக்க வீரர் அகானி சிம்பினே தங்கப்பதக்கம் வென்றார். மற்றொரு தென்னாபிரிக்க வீரரான ஹென்றிசோ பிராண்ட், வெள்ளி பதக்கம் வெல்ல யோகன் பிளேக்கால் வெண்கல பதக்கமே பெற முடிந்தது.

எனினும், கடந்த 2011ஆம் ஆண்டு தவறுதலாக ஓட்டத்தை தொடங்கியதாக போல்ட் தகுதி நீக்கம் செய்யப்பட்டபோது, பிளேக்கே தங்க பதக்கம் வென்றிருந்தார். ஆகவே போல்டின் ஓய்வின் பின்னர் பிளேக்கே உலகின் அதிவேக மனிதராக வலம் வருவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரின் ஓட்ட பெறுபேறு இரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அதேபோல் பெண்களுக்கான 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இரண்டு முறை ஒலிம்பிக் சம்பியன் பட்டம் வென்ற எலைன் தாம்சன் தோல்வியடைந்தார். பெண்களுக்கான 200 மீட்டர் ஓட்டத்தில் மிட்செல் லீ ஆயே தங்கம் வென்றார்.

நம்பகமான, அனுபவம் வாய்ந்த வீரர்களே இவ்வாறு சோபிக்கத் தவறியதால் போல்ட் கடும் அதிருப்தியடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 18.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.